பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 08 2026 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுடன் விவாதித்தார்.

2. கோதுமை மாவு மற்றும் அதுசார்ந்த தயாரிப்புகளின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

3. தமிழகத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை பாதிக்காத வகையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

4. கோம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு கோவை அணி முன்னேறி உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுடன் விவாதித்தார்.

இரண்டு நாள் பயணமாக மாஸ்கோ சென்ற அவர், இருதரப்பு வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு, எதிர்காலத்தில் நடைபெற உள்ள உயர்நிலை மாநாடுகள் குறித்து ஆலோசித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் எரிசக்தி துறையில் இந்தியா - ரஷ்யா இடையேயான கூட்டாண்மை வளர்ச்சியடைந்து வருவதாக டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின்போது பேசிய ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின், இந்தியாவின் வேளாண் துறைக்கும், விவசாயிகளுக்கும் ஆதரவு அளிப்பதற்கான நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான உர விநியோகம் அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா - ரஷ்யா இடையேயான நடப்பாண்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் திரு. விளாடிமிர் புதின் தெரிவித்தார்.

<<<<>>>>

கோதுமை மாவு மற்றும் அதுசார்ந்த தயாரிப்புகளின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

இதற்கான ஏற்றுமதிக் கொள்கையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இது உடனடியாக அமலுக்கு வருவதாகவும் வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட கோதுமை ரகத்தின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

<<<<>>>>

*தமிழகத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை பாதிக்காத வகையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.*

*திருவாரூரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண்மையை பாதிக்காத வகையில் இடங்களைத் தேர்வு செய்து விமான நிலையங்களை அமைக்கலாம் என்று தெரிவித்தார்.*

*மக்கள் கருத்தறிந்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.*

*மேகமலையில் தொன்மையாக வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களை பாதுகாக்க மாநில அரசு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.*

*வீட்டிற்கு 3 சிலிண்டர் உள்ளிட்ட மாநில அரசின் திட்டங்களை வரவேற்பதாக திரு. வீரபாண்டியன் கூறினார்.*

*<<<<>>>>*

*நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் புலி தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூடலூர் ஓவேலி லாரஸ்டன் பகுதியில் புலி தாக்கியதில் அண்மையில் அடுத்தடுத்து 2 பேர் உயிரிழந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.*

*எனவே இந்த விவகாரத்தில் மாநில அரசு உடனடியாக தலையிட்டு புலி அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திருமதி பிரேமலதா விஜயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*<<<<>>>>*

*நாமக்கல் மாவட்டத்தில் சாலை விதிமீறல்களைக் கண்காணித்து தானியங்கி முறையில் அபராதம் விதிக்கும் நடைமுறை நாமக்கல் - சேலம் சாலை சந்திப்பில் தொடங்கப்பட்டுள்ளது.*

*வாகன ஓட்டிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு மாறாக அவர்களுடைய பாதுகாப்பு கருதி இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. யாதவ் கிரீஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Voice Byte – Yadav Girish – 55 Sec)*

*<<<<>>>>*

*கோம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.*

*சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*<<<<>>>>*

*இருவரிச் செய்திகள்*

*கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார், வாகன உதிரி பாகங்கள், எஃகு ஆகிய பொருட்களுக்கு அடுத்த ஆண்டு முதல் 50 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.*

------------

*எல்லை விவகாரம் தொடர்பான பேச்சுகளில் இந்தியாவும்-சீனாவும் தொடர்ந்து ஈடுபடும் என்று சீனா தெரிவித்துள்ளது.*

------------

*புதுச்சேரியில் 14 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான நடப்பாண்டுக்கான பட்ஜெட்டை முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி தாக்கல் செய்தார்.*

------------

*பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.*

-----------

*ராணிப்பேட்டை மாவட்டம் சென்னசமுத்திரம் அருகே லாரியின் பின்புறம் கார் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.*

------------

*நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு 3 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற நீர்வளத்துறை அதிகாரிகள் 2 பேரை லஞ்ச ஒழிப்புக் காவல்துறையினர் கைது செய்தனர்.*

------------

*சேலம் அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயனாளர்கள் QR Code மூலம் கருத்துகளை பதிவு செய்யும் வசதியை ஆட்சியர் திரு. இளம்பகவத் தொடங்கி வைத்தார்.*

------------

*தமிழக அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் நாளை முதல் அடுத்த மாதம் 16ஆம் தேதி வரை <u>www.cecc.in</u> என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

-----------

*திருச்சியில் இருந்து அகமதாபாதிற்கு அடுத்த மாதம் 27ஆம் தேதி முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் வாராந்திர ரயில் சேவை இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.*

------------

*வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே அம்முண்டி கிராமத்தில் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடையில் நாட்டு வெடிகுண்டுகள் வெடித்ததில் 6 பேர் காயமடைந்தனர்.*

------------

*சென்னையில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களுக்கான குறைதீர்ப்பு முகாம் நாளை மறுநாள் மேற்கு மாம்பலத்தில் உள்ள ஸ்ரீசீதாராம் பள்ளியில் நடைபெற உள்ளது.*

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு கோவை அணி முன்னேறி உள்ளது.*

*சென்னையில் நேற்று நடைபெறுவதாக இருந்த கோவை - திருப்பூர் அணிகளுக்கு இடையேயான எலிமினேட்டர் சுற்று ஆட்டம் மழை காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது.*

*இதையடுத்து ரன் ரேட் அடிப்படையில் கோவை அணி இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு முன்னேறியது.*

---------------

*Grand Chess Tour இறுதிச்சுற்றில் இந்தியாவின் பிரக்ஞானந்தா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிச் சுற்றில் அவர், ஜெர்மனியின் Vincent Keymar-ஐ வென்றார்.*

இறுதியாட்டத்தில் பிரக்ஞானந்தா, அமெரிக்காவின் Fabiano Caruana-வை எதிர்கொள்கிறார்.

------------

Budapest ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 11-9, 11-6, 11-5 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் Will Salter-ஐ வென்றார்.

-------------

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் அர்ஜென்டினாவிற்கு எதிரான ஆட்டத்தில் 3-5 என்ற கோல் கணக்கில் இந்தியா தோல்வியடைந்தது.

<<<<>>>>